# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1976/42 - 2016 ජූලි මස 22 වැනි සිකුරාදා - 2016.07.22

1976/42 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.:
4-3/7/2014/எச்ப்பிள்யு/112..
எனது இலக்கம்.: கேடீஎஸ்/குண்/04/07/16/04/60(III).

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், குண்ட சாலை பிரதேச செயலாளர் பிரிவில், உடகம்பஹா கோரலே சிறு பிரிவு, மெணிக்ஹின்ன (705) கிராம அலுவலர் பிரிவில் உள்ள, மெணிக்கின்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக கண்டி நில அளவை அத்தியட்சகரினால் 2016.05.19 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மஹ 6575 துண்டு இல. 1 தொடக்கம் 2 (காணித் துண்டுகள் 02) வரை விபரிக்கப்பட்டுள்ள 0.0080 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணித் துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றன:-

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: தன்னெகெதரவத்தை; விபரம்: திறந்த பயனற்ற நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஆர். எம். ஐ. பி. ராஜபக்ஸ, இல. 47, பிடவல, மெணிக்கின்ன; விஸ்தீரணம்: 0.0040 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: கிரவன்கே வத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம், படிகள் மற்றும் மதில் உள்ளது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: பி. ஏ. வீரசேகர, இல. 25, தெல்தெணிய வீதி, மெணிக்கின்ன; விஸ்தீரணம்: 0.0040 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு குண்டசாலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகை யையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் இரு பிரதிகளாக எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சமந்தி டீ. நாகஹதென்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
குண்டசாலை.

பிரதேச செயலகம்,
குண்டசாலை,
2016, யூலை 14.

8 - 155